# டாபிந்து

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர் 42 | இதழ் 04 | 2026 வைகாசி மாதப் பதிப்பு


# சகல உழைக்கும் மக்களின் உழைப்பிற்கும் கௌரவத்துக்கும் அர்ப்பணிப்பிற்கும் நியாயம் கிடைக்கும் மே தினம்




மே தினம் என்பது வரலாறு மட்டுமன்றி தொழிலாளர்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் உத்தரவாதமாகும். 40 வருடம் தொழிலாளர்களின் அபிமானத்துக்காக பாடுபடும் தொடர் போராட்டம், சர்வதேச தொழிலாளர் தினம் டாபிந்து எங்களால் சிவில் சமூக அமைப்புகளின் பங்குபற்றலுடன் கட்டுநாயக்கவில் நடத்தப்பட்டது. இதில் டாபிந்து கூட்டு ஒன்றியம், சிரமாபிமானி கேன்தரய, ஸ்ரீலங்கா சமாதானத்துக்கான பதனம, முடிவுப்பொருள் மற்றும் ஆடைகள் சேவை சங்கம், நாங்கள் பெண்கள் அமைப்பு, ஸ்ரீ விமுக்தி மீனவர் பெண்கள் அமைப்பு, கம்பஹா மாவட்ட புரவெசி கமிட்டி, மனித உரிமைகளுக்கான அபிவிருத்தி நிறுவனம் போன்ற அமைப்புகள் மற்றும் ஏராளமான தொழிலாளர்கள் கைக்கோர்த்துக் கொண்டனர். இதில் தொழிலாளர் அமைப்புகள் சார்ந்த பலர் பல பிரதேசங்களில் இருந்து வந்து கலந்து கொண்டனர். இது தொழிலாளர் உரிமை, கௌரவம், சமத்துவம் மற்றும் பாதுகாப்பான வேலைச்சூழல் தொடர்பாக கவனம் செலுத்தும் வகையில் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட மே தினமாகும். வர்த்தகவலயங்களில் உள்ள இளைஞர் யுவதிகள், விவசாய, மீனவ சமூகம் ஆகியோரும் எங்களோடு

2ஆம் பக்கம் பார்க்க...

## உள்ளே!


**பக்கம் 03-04** – சமூக சாதாரணத்துவம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் அனைவருக்கும் கௌரவமான தொழில்

**பக்கம் 05-06** – எமது வேலை

**பக்கம் 07-08** – தொழிலாளர் உரிமை

**பக்கம் 09** – பிரிட்டோ பெர்ணன்டோ சகோதரரை அன்புடன் வரவேற்போம்

**பக்கம் 10** – சிந்தனை

**பக்கம் 11** – கவிதை பக்கம்/ வெளிநாட்டு செய்தி

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221, வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
முகநூல்: dabindu collective sri lanka:


# சர்வதேச தொழிலாளர் தினத்தில் தொழிற்சங்கங்களின் பொறுப்புணர்வு

“ஆரோக்கியமான உள-சமூக வேலைச்சூழலை உறுதிப்படுத்துதல்” என்ற உலகளாவிய கருப்பொருளை மையமாகக் கொண்டு சர்வதேச தொழிலாளர் தினக் கொண்டாட்டம் உலகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதன் மூலம் தொழிலாளர் வலிமை, ஒற்றுமை, பரஸ்பர ஒத்துழைப்பு, மரியாதை மற்றும் பாலின சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, உலகளாவிய ஒற்றுமையின் வாயிலாக சுரண்டலுக்கு எதிராக தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை தொழிலாளர்கள் வலியுறுத்தினர்.

அதிக இலாப நோக்கில் இயங்கும் ஆடைத் தொழில்துறையின் முதன்மை இயக்க சக்தி பெண்களே ஆவர். ஆசியா முழுவதும் உலக வட நாடுகளுக்கு ஆடைகளை உற்பத்தி செய்து அனுப்பும் தொழிலாளர்கள், வறுமை மட்டத்திலான ஊதியம், வன்முறை, துன்புறுத்தல் மற்றும் கூட்டு பேச்சுவார்த்தை நடத்தும் உரிமை, தொழிற்சங்க சுதந்திரம் போன்ற அடிப்படை கொள்கைகள் மீதான சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது நிலவி வரும் உலகளாவிய நெருக்கடியின் மத்தியில், போர் மோதல்கள் மற்றும் இராணுவமயமாக்கலின் விளைவாக மின்சாரக் கட்டணங்கள் அதிகரித்துள்ளதால் தொழிலாளர்களின் அன்றாட வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய தேவைகளின் செலவுகள் உயர்ந்துள்ளன. உலகளாவிய தாக்கங்களின் விளைவாக தொழிலாளர்களின் வாழ்க்கை மேலும் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது.

மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளில், முதலாளிகள் தங்களது இலாபத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் தொழிற்சாலைகளை மூடுதல், வேலைவாய்ப்புகளை குறைத்தல், மேலதிக நேர வேலை வாய்ப்புகளை நீக்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதேசமயம், ஐந்து நாள் வேலை வாரத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலைகளில், அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண் தொழிலாளர்களே ஆவர். அவர்கள் தங்களது வாழ்வாதாரம் தொடர்பான பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். உடல், மன மற்றும் பொருளாதார அழுத்தங்களுக்கு உள்ளாகி, வன்முறை மற்றும் துன்புறுத்தல்கள் மேலும் தீவிரமடைந்து வருகின்றன.

தொழிலாளர் உரிமைகளை ஒடுக்கி, முதலாளிவர்க்கத்திற்கு சாதகமான சட்டங்களையும் விதிமுறைகளையும் உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கண்ணியமான வேலைவாய்ப்புகளுக்குப் பதிலாக, அடிமைத் தொழிலையும் தொழிலாளர் சுரண்டலையும் தொடர்ச்சியாக நிலைநிறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய கடுமையான சூழலில், ஒழுங்குபடுத்தப்பட்டு உலகளாவிய சக்தியையும் வலிமையையும் உருவாக்குவதற்காக, நாடுகளால் உருவாக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளை பயனுள்ளதாக பயன்படுத்துவதோடு, அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கவும், எமது கூட்டு வலிமையை வெளிப்படுத்தவும் நாம் ஒன்றிணைவோம்.

1ஆம் பக்கத் **சகல உழைக்கும் மக்களின்...**

இணைந்துக்கொண்டனர். நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வருகை தந்த முதலாளி வர்க்கத்திற்காக வேலை செய்யும் எமது சகோதர சகோதரிகளின் பிரச்சினைகள், உயர்ந்து செல்லும் வாழ்க்கை செலவு, தொழிலாளர் உரிமை மீறல், பாலியல் தொல்லைகள் போன்ற பல்வேறு தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாக சிவில் சமூக அமைப்புகளின் தலைவர்களினால் முன்வைக்கப்பட்டது. இங்கு டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் செயலாளர் சமிலா துஷாரி சகோதரியால் சபையில் தலைமை உரை நிகழ்த்தப்பட்டது. இம்முறை தொழிலாளர் தினத்துடன் கூடியதான பொது கொள்கை பிரகடனம் சிரமாபிமானி கேந்தரய செயல்திட்ட பணிப்பாளர் சட்டதரணி இசுரி ரொட்ரிகோ சகோதரியால் முன்வைக்கப்பட்டதோடு மனித உரிமைக்கான அபிவிருத்தி நிறுவனத்தின் (ரெட் யூனியன்) பிரதான செயலாளர் சந்ரா தேவநாராயன, சகோதரி கலாநிதி சேபாலி கோட்டேகொட, முடிவுப்பொருள் மற்றும் ஆடைத்தொழில் சேவை சங்க பிரதான செயலாளர் லலிதா ரஞ்சனி சகோதரி, பிரஜா திரிய பதனமவின் நிறைவேற்று பணிப்பாளர் இந்ராணி குசுமலதா சகோதரி, கம்பஹா மாவட்ட புரவெசி கமிட்டு அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி எம்.குசும் சில்வா சகோதரி, நாம் பெண்கள் அமைப்பின் இளைஞர் இணைப்பாளர் சசென்கா அபேசூரிய சகோதரி, சிரமாபிமானி கேந்தரய செயல்திட்ட இணைப்பாளர் சுகத் ராஜபக்ஷ சகோதரர், ஸ்ரீ விமுக்தி மீனவ பெண்கள் அமைப்பினை பிரதிநிதித்துவப்படுத்தி கிறிஸ்டினா துலானி சகோதரி மற்றும் இலங்கை சமாதானத்துக்கான பதனம நிறுவனத்தின் செயல்திட்ட முகாமையாளர் ரிஷினி டில்ஷானி சகோதரி ஆகியோர் தத்தமது அமைப்புகள் பிரதிநிதித்துப்படுத்தும் மக்களுக்காக தமது கருத்துக்களை முன்வைத்தனர்.





# சமூக சாதாரணத்துவம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக சகலருக்கும் கௌரவமான தொழில்

## (டாபிந்து கூட்டு ஒன்றியம் - சர்வதேச தொழிலாளர் தின பிரகடனம்)

நாற்பத்தொரு வருடங்களாக டாபிந்து குழுமம் இலங்கையின் ஆடைத் தொழிலின் இருதயமான பெண் தொழிலாளர்களுக்காக முன்னிற்கிறது. கடந்த 5 வருடங்களாக நாங்கள் பெண்களின் உழைப்பில் தங்கியுள்ள ஆடைத் தொழில்துறை பெண்களின் தலைமைத்துவம் கொண்ட தொழிற்சங்கங்களின் அமைப்பாக நாங்கள் செயற்பட்டுள்ளோம்.

இவ்வருடத்தில் ஆடைத்தொழில்துறை பல ஆழமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் குரல் கொடுக்கின்றோம்.

**தொழிற்சாலைகள் மூடுவது அதிகரித்துள்ளது.**
**உற்பத்தி இலக்குகள் அதிகரித்துள்ளது.**
**தொழில் பாதுகாப்பற்றதாக உள்ளது.**
**தொழிலாளர்கள் மிகவும் ஆபத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.**

நாங்கள் விளக்கமாக சொல்வது இவை எல்லாம் பொருளாதார சிக்கல்கள் அல்ல. இவை தொழிலாளர் மீது சுமத்தப்படும் சிக்கள்களே. இன்று சுரண்டல் முறை பொருளாதாரம் ஸ்தீர தன்மை மற்றும் உலகளாவிய சிக்கல்களில் ஏற்படும் தாக்கங்களால் நிறைந்துள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள யுத்தம், பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைமை காரணமாக மேலும் பிரச்சினைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

உலக செல்வந்த வர்த்தக பெயர்கள் தமது இலாபத்தை பாதுகாத்தல், தொழிலாளர் கோரிக்கைகளை மறுத்தல், குறைவான கொடுப்பனவு மற்றும் பகிர்வுகளை தாமதப்படுத்தல், நாடுகளுக்கிடையிலான தலைமை மாற்றம், பல வருடங்களாக பெண் தொழிலாளர்கள் குறைந்த சம்பளம் மற்றும் சுகாதாரமற்ற சேவை போன்றவற்றால் மேலும் இத்தொழிலாளர்கள் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நாங்கள் இவற்றை எதிர்ப்போம். உழைப்பு சுரண்டலை நியாயப்படுத்தும் கீழ்வரும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது.

- எந்தவிதமான கொடுப்பனவுகளும் இன்றி, சட்டப்படி எல்லைகள் தாண்டிய, வேலை செய்யும் நேரம்.
- வகைக்கூறலுக்கு உட்படாதவாறு, சுதந்திரமாக தற்காலிக சேவைக்கு முறையற்ற விதத்தில் வேலைக்கு பணியாட்களை அமர்த்தல்.
- அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத சம்பள முறைமை.
- பணியாளர்கள் உடல், உள சகோதரத்துவத்தை பாதிக்கும் வகையிலான உற்பத்தி இலக்கு.
- தொழிற்சங்கங்களை சுதந்திரமான முறையில் அடக்குதல் மற்றும் பணியாளர் தலைவர்களுக்கு பலவந்தம் ஏற்படுத்தல்.

2ஆம் பக்கம் பார்க்க...



3ஆம் பக்கத் **சமூக சாதாரணத்துவம்...**

இவை மட்டுமன்றி தேசிய பாதுகாப்பு முறைமை இல்லாமை, போதுமான குழந்தை பராமரிப்பு இன்மை, பெண்களின் இரட்டை முறை வேலை, எந்தவிதமான வரவேற்புமற்ற பெண் தொழிலாளர் சம்பளம் பெறா பாதுகாப்பற்ற தொழிலில் அதிக பாரத்தை சுமக்கின்றனர்.

சட்டப்பாதுகாப்பு இருந்தாலும், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் குறைவாகவே உள்ளது. விசேடமாக சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழிற்சங்கங்களை ஒழித்தல். பயமுறுத்தல் ஆகியன அதிகரித்து வருகிறது. ஒன்று கூடுவதற்கு பேசுவதற்கு மற்றும் ஒன்று கூடி செயலாற்றுவதற்கு உரிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு வருகிறது.

**2026 இல் எமது கோரிக்கைகளாக,**

- தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், இழப்பீடு இன்றி மற்றும் முறையற்ற விதத்தில் தொழில் இழப்பை ஏற்படுத்தல், தொழிற்சாலைகளை மூடுதல் என்பவற்றை உடனடியாக நிறுத்தல் வேண்டும்.
- உயர்ந்த சம்பளம் வழங்குதல் மற்றும் சகல ஆடைத் தொழிலாளர்களுக்காக சாதாரண உயர்ந்த சம்பளம் வழங்க ஏற்பாடு செய்தல்.
- ஒன்று கூடல் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல். தொழிற்சங்கங்களை பாதுகாத்தல். சகல விதமான தொழிற்சங்கங்களும் நசுக்கப்படுதலை முடிவுக்கு கொண்டுவருதல்.
- சேவை நிலையத்தில் அல்லது அதற்கு அயலில் ஆண், பெண் பாகுபாட்டுடனான வன்முறைகள், துன்புறுத்தல்கள் தொடர்பாக சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- சுகயீன லீவு, மகப்பேற்று லீவுகளை சம்பளத்துடனான லீவுகளாக உறுதிப்படுத்தல்.
- சேவையாளர்களுக்கு போசனைமிக்க உணவு மற்றும் பெற்றுக்கொள்ளக்கூடிய சுகாதார சேவைகளை வழங்குதல்.
- 24 மணிநேரம் சேவையில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தை பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்தல்.
- சகல சேவையாளர்களுக்கும் விரிவான பாதுகாப்பு முறைமையை ஸ்தாபித்தல்.
- தமது வதிவிட மாவட்டங்களுக்கு வெளியில் தொழில் செய்யும் சேவையாளர்களுக்கு வாக்குரிமையை உறுதிப்படுத்தல்.
- சகல பிரிவுகளிலும் பெண் தொழிலாளர்களின் கௌரவம், அதிகாரம் மற்றும் உரிமைகளை பாதுகாத்தல்.

மேலும் சர்வதேச வர்த்தக நிலையங்களிடம் நாம் வேண்டிக்கொள்வது, தொழிலாளர்களின் உள நிலைமை தொடர்பாக வகைக்கூறலை பொறுப்பேற்கும்படி, இலாபம் என்பது தொழிலாளர்களின் உழைப்பை சரண்டல், தொழில் நிலையற்ற தன்மை மற்றும் தொழில் இழப்பை ஏற்படுத்தலினூடாக பெறக்கூடியதல்ல.

பெண் தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாக மட்டுமல்ல அவர்கள் வீட்டில், சமூகத்தில், தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளனர். அவர்களுடைய உழைப்பு தொழிற்சாலையை நடத்துவதற்கு உதவியபோதும் அவர்கள் வாழ்க்கை இன்னும் பாதுகாப்பற்றதாகவே உள்ளது.

இவை முடிவுக்கு வரவேண்டும். இந்த மே தினத்தில் நாங்கள் உழைப்பு சுரண்டலுக்கு எதிராக மட்டுமல்ல சாதாரணத்துவம், கௌரவம், கவனிப்பு மற்றும் தொழிலாளர் சக்தி மூலம் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் பெற்ற எதிர்காலத்துக்காக முன்வருவோம்.

எமது உழைப்பு இலாபகரமானதல்ல. எமது வாழ்க்கை செலவழிக்க முடியாத ஒன்று.

சகலருக்கும் கௌரவமான தொழில் - சமூக சாதாரணத்துவம் மற்றும் பொருளாதார சமத்துவத்தை முன் கொண்டு செல்வதே.

தொழிலாளர் ஒற்றுமைக்கு வெற்றி!

**சகல பெண் தொழிலாளர்களுக்கும் கௌரவமும் நியாயமும்!**

# குழு உள ஆலோசனை உதவி எங்களால்



2026 ஏப்ரல் 5 ஆம் திகதி பியகம மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் சுதந்திர வர்த்தக வலயங்களில் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும், திட்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அனர்த்தத்தின் பின்னரான உள நல சுகாதாரம், வாழ்க்கைமுறை தொடர்பாக கவனமெடுத்து குழு ஆலோசனை வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தின் நோக்கம் அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள மன உளைச்சல், அதிர்ச்சி, உளப்பாதிப்புகளை முகாமை செய்வதற்கு பங்குப்பற்றுனர்களுக்கு உதவிசெய்வதே. இச் செயற்பாடுகள் பியகமவில் உளவியல் ஆலோசகர் கங்கா ரத்நாயக்க அவர்களாலும் வவுனியாவில் உளவியல் ஆலோசகர் துஷாந்தன் பிரியதர்ஷனி அவர்களினாலும் நடத்தப்பட்டது. அதனூடாக உள்ளக கலந்துரையாடல், ஆலோசனை செயற்பாடுகள் மற்றும் அனுபவ பகிர்வு என்பன ஊடாக பங்குபற்றுனர்கள் அவர்களின் உளவியல் சவால்களை வெளிப்படையாக கலந்துரையாட பாதுகாப்பு சூழலில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்குவதற்கும் ஊக்கப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. இக் கருத்தரங்கு மூலம் பங்குபற்றியோருக்கு உளநல சுகாதார பாதுகாப்பு தொடர்பாக கருத்துக்கள் வழங்கப்பட்டதோடு அனர்த்தத்தின் பின்னர் ஒத்துழைப்பு, ஒற்றுமை என்பவற்றின் முக்கியத்துவம் என்பவற்றை வற்புறுத்த முடிந்தது. பமுன்வைக்ர்கள் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ள அவற்றுக்கு முகங்கொடுக்க தேவையான மன உறுதி பெற வாய்ப்பளிக்கப்பட்டது.



# எல்லோருக்கும் போசனையான உணவு

கடந்த திட்வாவின்போது அனர்த்தத்திற்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட பியகம வர்த்தக வலயத்தில் சேவையாற்றும் ஆடைத்தொழிற்துறை சேவையாளர்களுக்கு உணவுப்பொதி பகிர்ந்தளிப்பு 2026.04.05 ஆம் திகதி பியகம டாபிந்து காரியாலய மற்றும் பியகம விடுதிகளில் நடைபெற்றது. அதன் மூலம் 100 இற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு உணவுப்பொதி பகிரப்பட்டது. சகலருக்கும் போசனையான உணவுவேளை என்பதே இச்செயல்திட்டத்தின் நோக்கமாகும்.



# பராமரிப்பு தொடர்பாக மக்களுக்கான ஒரு பதிலளிப்பு




இம்முறை வெசக் போய தினத்தை முன்னிட்டு சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களின் விருப்பத்துக்கு அமைய டாபிந்து குழுமத்தால் சீனி சம்பல் மற்றும் பாண் தன்சல் ஏற்பாடு செய்யப்பட்டது. தொழிலாளர் ஒத்துழைப்புடன் 500 இறாத்தல் பாண் பகிர்ந்தளிக்கப்பட்டது. இது கடந்த மே மாதம் 4 ஆம் திகதி கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் 6 ஆவது வாயிலில் மற்றும் அவரிவத்த சந்தைக்கு முன்னர் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதன்மூலம் சமூக ஒற்றுமை தொடர்பில் மக்களை ஏற்பாடு செய்யும் நலன்புரி வேலைத்திட்டங்களில் முக்கியத்துவம் வெளிப்படையானது. அதுபோல உயரிய, நேரான எண்ணங்களுடன் சமூகத்தினர் ஒன்றிணைவதற்கு அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கு ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்கிக் கொள்ள முடிந்தது. சமூக ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தி மக்களின் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்ளும் முகமாக இச் செயற்பாடு நடைபெற்றது.

# வவுனியாவில் ஆடைத்தொழிற்சாலை பெண் தொழிலாளர்களுக்கான உள நல ஆலோசனை வேலைத்திட்டம்

வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண் தொழிலாளர்களுக்கு தனியாள் உளநல ஆலோசனை சேவை வழங்கும் வேலைத்திட்டம் மருக்கரம்பலாய் கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழ் டாபிந்து குழுமத்தினால் 2026.04.25 ஆம் திகதி ஐந்து பெண் தொழிலாளர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி, ஐந்து பெண்களுக்கு உளநல ஆலோசனை வழங்கும் செயற்பாடு நடைபெற்றது. துஷாந்தன் பிரியதர்ஷனி அவர்களால் பயனாளிகளிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு குழு ஆலோசனை செயலமர்வு நடத்தப்பட்டது. அதன்பின் ஒவ்வொரு பயனாளி தொடர்பாக தனித்தனி செயலமர்வு நடத்தப்பட்டது. பயனாளிகள் தமது தனிப்பட்ட பிரச்சினைகள் பகிர்ந்து கொண்டு அது தொடர்பாக உளநல ஆலோசனைகள் பெற்றுக்கொண்டனர்.



# தொழிலாளர் உரிமைகளை பலப்படுத்தல் மற்றும் பெண்களுக்கான கௌரவமான வேலைவாய்ப்புகளை விருத்திசெய்யும் செயற்றிட்டம்





பெண்கள் சிவில் சமூகத்தை (WCCs) பலப்படுத்தல் பெண் தொழிலாளர்கள் மற்றும் கீழ்மட்ட தலைவர்களை பலப்படுத்தலை நோக்கமாகக் கொண்ட செயற்றிட்டமானது தொழிலாளர் உரிமைகளை பலப்படுத்தல் மற்றும் பெண்களுக்காக கௌரவமான வேலை மேம்பாட்டு செய்தலினை அடிப்படையாகக் கொண்டு டாபிந்து குழுமத்தினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துகிறது.

டாபிந்து குழுமத்தினால் இந்த செயற்றிட்டத்தின் கீழ் 2026 ஏப்ரல் 7 ஆம் திகதி பெண்கள் சமூக குழு சார்பாக செயல்திட்ட கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்த கருத்தரங்கு எமது பங்குதாரர் குழுமங்களுடன் தொடர்புகளை ஆரம்பிப்பதற்கு முதற்காரணமாக இருந்ததுடன் குழுமத்தின் சக்தியை மேம்படுத்தவும் தலைமைத்துவத்தை பலப்படுத்தவும் மற்றும் பெண் தொழிலாளர்களின் உரிமைகளை முன்னெடுத்துச் செல்லவும் இதன் மூலம் கவனம் செலுத்தப்பட்டது. இதனை செயல்படுத்தி செல்வதற்கான ஆரம்பமும் எதிர்பார்த்த பெறுபேறுகள் தொடர்பாகவும் தெளிவுப்படுத்தப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் அடுத்த கட்டமாக 2026 ஏப்ரல் 28 ஆம் திகதி இரண்டாவது செயலமர்வு வேலைத்திட்டத்திற்கு அமைய வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இச் செயலமர்வு தெரிவு செய்யப்பட்ட பெண்கள் சமூக சங்கங்களுடன் (WCCs), தங்களது திட்ட முன்மொழிவுகளை மேலும் வலுப்படுத்துதல், செயல்படுத்தும் திட்டங்களை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள திட்ட அமுலாக்கத்திற்குத் தேவையான முக்கிய ஆவணப்படுத்தல் செயல்முறைகள் குறித்து தெளிவான புரிதலை மேம்படுத்தும் நோக்கில் இந்தப் பயிலரங்கு நடத்தப்பட்டது.

மேலும், ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் நடைமுறைகள், நிதி மேலாண்மை மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு (M&E) கட்டமைப்புகள் உள்ளிட்ட அத்தியாவசிய அம்சங்களும் இந்தப் பயிலரங்கில் உள்ளடக்கப்பட்டன. சமூக மட்டத்தில் நடவடிக்கைகள் வெளிப்படையாகவும் பயனுள்ளதாகவும் செயல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் பங்கேற்பாளர்களுக்கு நடைமுறை அறிவு வழங்கப்பட்டது.

நிதி மேலாண்மை தொடர்பான வழிகாட்டுதலுக்காக நிதி ஆலோசகரும் நிதிப் பயிற்சியாளருமான சசிகலா பொதேஜு வளவாளராக பங்கேற்றார். திட்ட மேலாண்மை அமர்வை டாபிந்து கூட்டு ஒன்றியத்தின் திட்ட மேலாளரான யசாரா விதுமினி வீரதுங்க வழிநடத்தினார். கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் தொடர்பான அமர்வை டாபிந்து கூட்டமைப்பின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலரான ருவினி வாசனா நடத்தினார்.

இந்தப் செயலமர்வின் முக்கிய நிகழ்வாக ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல் மற்றும் உத்தியோகபூர்வ ஒப்படைப்பு நிகழ்வு அமைந்தது. இது திட்டமிடல் நிலையிலிருந்து செயல்படுத்தும் நிலைக்கு நகரும் முக்கியமான கட்டத்தை குறித்தது. டாபிந்து கூட்டமைப்பு பின்வரும் அமைப்புகளுடன் உத்தியோகபூர்வ கூட்டாண்மைகளை ஏற்படுத்தியது:

மனித விடுதலைக்கான அபிவிருத்தி (RED), ஸ்ரமாபிமானி மையம் (ஞமு)இ இலங்கை விடுதலை மீனவ மகளிர் அமைப்பு, இலங்கை சமாதானத்துக்கான பதனம (SLEF), கம்பஹா மாவட்ட புரவெசி கமிட்டி (Citizen's Committee), நாங்கள் பெண்கள் அமைப்பு (WWL), பிரஜா திரிய அறக்கட்டளை (CEF) தொழிலாளர் உரிமைகளை முன்னேற்றவும் பெண்களுக்கு கண்ணியமான வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவும் கொண்டுள்ள பொதுவான அர்ப்பணிப்பை வலுப்படுத்தும் வகையில் இவ்வமைப்புகள் டாபிந்து கூட்டமைப்புடன் இணைந்தன. இந்த நிகழ்வின் போது, தாபிந்து கூட்டமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் திருமதி சமிலா துஷாரி அவர்கள் ஒப்பந்தங்களை உத்தியோகபூர்வமாக வழங்கினார்.

இது திருப்புமுனையாக இலங்கை நாட்டின் பெண் தொழிலாளர்களுக்கான உறுதியான அடிமட்டத்தின் பங்குதாரர்களை உருவாக்குவதற்கு மற்றும் ஒளிமயமான, உரிமைகளை அடிப்படையாக கொண்ட மாற்றம் ஒன்றை ஏற்படுத்த டாபிந்து குழுமத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

# தொழிலாளர் உரிமைகளை பலப்படுத்தல் மற்றும் பெண்களுக்கான கௌரவமான வேலையை மேம்பாடடைய செய்யும் புதிய செயல்திட்டம்

## சிவில் சமூக நிறுவனங்களின் செயற்பாடுகள்



தொழிலாளர் உரிமைகளை பலப்படுத்தல் மற்றும் பெண்களுக்கு சிறப்பான வேலை மேம்பாடு செய்தல் செயல்திட்டத்தின் கீழ் பெண் தொழிலாளர்கள் பலப்படுத்தப்படுகின்றனர். தொழிலாளர் உரிமைகள் சம்பந்தமாக அறிவை பலப்படுத்தல் மற்றும் சேவை நிலையத்தில், சமூக மட்டத்தில் கௌரவம், சுகாதாரம் மற்றும் சம உரிமைகளை மேம்படுத்துதல் என்ற நோக்கத்துடன் மக்கள் அடிப்படையான வேலைத்திட்டங்கள் சில வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் ஆரம்பமாக சிவில் சமூக அமைப்பு மற்றும் சமூக சாதாரணத்துவம், பெண்களை பலப்படுத்தலுக்கான அர்ப்பணிப்புடன் உள்ள கீழ்மட்ட அமைப்புகளில் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதே ஆகும்.

இச் செயல்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான ஆரம்ப செயற்பாடாக டாபிந்து குழுமத்தின் ஆலோசனையுடன் நடத்தப்பட்ட உளநல ஆலோசனை வேலைத்திட்டமாகும். அது கம்பஹா மாவட்ட மனித உரிமை புரவெசி கமிட்டி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தில் கலந்துக்கொண்டோர்களிடையே உளநலம் பற்றிய தெளிவு, மனவெழுச்சிகள் மற்றும் மன அழுத்த முகாமைத்துவத்தை மேம்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. சமூக மற்றும் சேவை நிலையங்களில் அழுத்தங்களுக்கு முகங்கொடுப்பது தொடர்பாக கலந்து கொண்டவர்களுக்கு செயல்பாடு மூலமாக வழிகாட்டப்பட்டது. தொழில் ஆலோசனை உதவி பகிரப்பட்டது. ஜா-எல பிரதேச செயலாளர் காரியாலய இணைப்பு ஆலோசகர் திருமதி வத்சலா ஜயகொடி சகோதரியால் பெறுமதிமிக்க வளவாளர் பங்களிப்பு கிடைக்கப்பெற்றது.

தொழிலாளர் உரிமைகள் பற்றிய அறிவை பலப்படுத்துவதன் நோக்கோடு ஃஎமது உரிமைகளை வெல்வதற்கு அறிவில் நாம் பலப்படுவோம்□ என்ற தலைப்பில் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் அங்கத்தினர் சார்பாக ILO C190 வேலை உலகின் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல் பற்றிய கொள்கை பற்றி தெளிவுப்படுத்தும் வேலைத்திட்டம் Red நிறுவனத்தினால் நடத்தப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் சேவை நிலையத்தின் துன்புறுத்தல், ஆண் பெண் பாகுபாடு கொண்ட செயற்பாடுகள், தொழிலாளரகளை உரிமை மீறல்களிலிருந்து பாதுகாத்தல் சம்பந்தமான ஒற்றுமையான செயற்பாடுகளின் முக்கியத்துவம் பற்றி தொழிலாளர்களாக விளக்கமளிப்பதே ஆகும். செயலமர்வுக்கு வளவாளராக Voice of Migrant Network இன் திரு கல்ப மதுரங்க அவர்கள் கலத்துக்கொண்டார். கலந்து கொண்டோருக்கு அவர்களது தொழில் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பாக மிகத் தெளிவாக விளக்கினார்.

இந்த செயல்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட மற்றுமொரு முக்கியமான வேலைத்திட்டம் புத்தளத்தில் உத்தர் அட்டவில்லுவ பிரஜா நிலையத்தில் நடைபெற்ற விசேட வைத்திய ஆலோசனை மற்றும் சுகாதார தெளிவுப்படுத்தல் வேலைத்திட்டமாகும். பெருந்தோட்ட, மீனவ, விவசாய மற்றும் முறைசாரா துறைகளில் வேலை செய்யும் பெண்கள் ஆகியோர் செயலமர்வில் கலந்து கொண்டனர். பெண்கள் சுகாதார, நோய் தவிர்ப்பு, தொழில் சுகாதார விளக்கம் மற்றும் சுகாதார சேவை விபரங்கள் தொடர்பில் செயலமர்வுகளில் கலந்துரையாடல் இடம்பெற்றது. புத்தளத்தில் பாலியல் நோய்கள் தடுப்பு பிரிவின் வளவாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் கலந்துக்கொண்டனர். கலந்துக்கொண்டோருக்கு பெறுமதியான வைத்திய வழிகாட்டல்கள், தெளிவூட்டல்கள் வழங்கி ஊக்கப்படுத்துவதை அடிப்படையாக கொண்டதாக அமைந்தது. இதற்கு டாபிந்து குழுமத்தின் மேற்பார்வையில் ஆசிய பதனமவின் நிதி அனுசரணை வழங்கியது.

தொழிலாளர் உரிமைகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான வேலைத்திட்டங்களோடு பாடசாலை இடைவிலகிய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் தேடுவோர் மற்றும் பெற்றோர் போன்றோர்களுக்கு தொழில் மற்றும் கல்வி வழிகாட்டல் வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை சமாதான பதனமவினால் நடத்தப்பட்டது. நெகி சிட்டின்ன வேலைத்திட்டத்தினால் நடத்தப்பட்ட இச்செயலமர்வின் ஊடாக உயர்கல்வி வாய்ப்பு, தொழில் வாய்ப்பு தொடர்பாக சுயவிபரப்படிவம் தயாரித்தல், நேர்முகப்பரீட்சைக்கான திறன், தற்போதைய தொழிற்சந்தை போன்றவற்றுக்கும் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் வழங்கப்பட்டது. வெற்றிகரமாக எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள தேவையான அறிவு மற்றும் நம்பிக்கை வழங்கல் இளைஞர் யுவதிகள் பலப்படுத்தல் என்பன இதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாகும்.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் பெண்கள் பலப்படுத்தல், தொழில் கௌரவம், உளவியல் நலம், கல்வி மற்றும் சம அந்தஸ்த்து, மேம்பாடு செய்யும் போது கீழ்மட்ட செயற்பாட்டாளர்களின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்பட்டது. அறிவு, ஆலோசனை, சுகாதாரம், கல்வி மற்றும் திறன் ஆகியவை பாதிப்படையக்கூடும் என எதிர்ப்பார்க்கும் மக்களுக்காக பாதுகாப்பான மற்றும் உதவி வழங்கும் சூழலை உருவாக்குவதை தொடர்ச்சியாக செயற்படுத்துகிறது.

ஃதொழிலாளர் உரிமைகளை பலப்படுத்தல் மற்றும் பெண்களுக்காக சிறப்பான பெறுமதியான வேலைகள் மேம்பாடு அடைய செய்தல்□ என்ற செயல்திட்டத்தின் கீழ் எமது நலன்பெறும் பிரஜா திரிய பதனமவினால் நடாத்தப்பட்ட ஆரம்ப நடவடிக்கைகளை பகிர்ந்து கொள்ள கிடைத்தமைக்காக பெருமைப்படுகிறோம். பெண்களின் தொழிலாளர் உரிமை, சுகாதாரம் மற்றும் சிறப்பான தொழில் வாய்ப்பு பலப்படுத்துவது அவர்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை நாங்கள் பாராட்டுகின்றோம்.

# மரியாதைக்குரிய பிரிட்டோ பெர்னாண்டோ அவர்களுக்கு சர்வதேச Per Anger விருது கிடைத்தமையை வரவேற்கின்றோம்



இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்காக மூன்று தசாப்தங்களுக்கு மேலாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்காக இடையறாது குரல் கொடுத்துவரும் பிரிட்டோ பெர்னாண்டோ அவர்களுக்கு, ஸ்வீடன் அரசின் Per Anger சர்வதேச மனித உரிமை மற்றும் ஜனநாயக விருது கடந்த மே 21 அன்று வழங்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்காக 35 ஆண்டுகளுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் செய்த பணியைப் பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டது.

இந்த சிறப்பான சாதனையை முன்னிட்டு டாபிந்து கூட்டமைப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் ஒன்றியம், மனித விடுதலைக்கான அபிவிருத்தி அமைப்பு, மனித உரிமை செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப பிரதிநிதிகள் மற்றும் பலர் இணைந்து பிரிட்டோ பெர்னாண்டோ அவர்களை கௌரவித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவரும் அவரது அர்ப்பணிப்பையும் தைரியத்தையும் பாராட்டி, இந்த சர்வதேச அங்கீகாரம் இலங்கையில் உண்மை, நீதி மற்றும் மனித உரிமைகளுக்காக பாடுபடும் அனைவருக்கும் கிடைத்த கௌரவமாகும் என்று வலியுறுத்தினர்.

பிரிட்டோ பெர்னாண்டோ அவர்களும் இந்த விருது தனக்கே மட்டுமல்ல, பல ஆண்டுகளாக உண்மை மற்றும் நீதிக்காக போராடிய அனைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் சொந்தமானது என்று தெரிவித்தார்.

அவருக்கு எங்களின் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது எதிர்கால பணிகளுக்கும் வலிமை, துணிவு மற்றும் வெற்றியை பெற வேண்டி வாழ்த்துகிறோம்.

# வவுனியாவில் பெண்களிடையே பாதுகாப்பு வட்டம் அமைப்பதற்கான முன்னேற்பாடு நிகழ்ச்சி

ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்கள் நாட்டின் முதுகெழும்பாவதுடன் அவர்கள் பலப்படுத்தப்பட வேண்டியவர்கள். வவுனியாவில் இயங்கும் ஆடைத்தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் பெண்களில் தெரிவுசெய்யப்பட்ட 25 பேருக்கு தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கி அவர்களை பலப்படுத்துவத்தும் பாதுகாப்பு வட்டமொன்றை உருவாக்குவதற்கான முன்னேற்பாடு நிகழ்ச்சி 03.05.2026 அன்று வவுனியாவில் இடம்பெற்றது. இதில் 50 பெண்கள் கலந்துக்கொண்டதுடன் அவர்களில் 25 பேரை தெரிவுசெய்வதற்கான வளவாளர்களாக திருமதி.சிறிதேவி மற்றும் வழக்கறிஞ்சர் சாருகேஷி ஆகியோர் கலந்துக்கொண்டனர். குழுச்செயற்பாடுகள் மற்றும் வினாக்கொத்து பயன்பாட்டின் மூலம் இத்தெரிவு இடம்பெற்றது.

# சிந்தனை

விடுதியின் அருகில் எல்லோரும் கூடி சிரிப்பும் பேச்சும் முழங்கிக் கொண்டிருந்தனர். நானும் என்ன விஷயம் என்று தெரிந்துகொள்ளச் சேர்ந்தேன்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தொழிற்சாலைகள் வழங்கிய பரிசுகள் பற்றிய பேச்சு நடந்துகொண்டிருந்தது. சில நிறுவனங்கள் ஒன்றும் வழங்கவில்லை. சிலர் ஒரு சாதாரண கோப்பை (Mug) மட்டும் கொடுத்திருந்தனர். மற்றொரு நிறுவனம் மாதுளைச் செடியை வழங்கியிருந்தது. ஆனால் தங்கும் விடுதியில் அதை நட்டுவைக்க இடமே இல்லை. சந்தியா சில மிளகாய் செடிகள் நட்டிருந்தார். வேலை முடித்து வந்தபோது அவற்றையும் யாரோ பிடுங்கிச் சென்றிருந்தனர். அப்படியிருக்க மாதுளைச் செடியை எங்கே நட்டுவைப்பது?

அதன் பிறகு தொலைபேசி திருட்டுகள், வீதியில் பெண்கள் எதிர்கொள்ளும் தொல்லைகள், விநியோகப் பணியாளர்களின் தொந்தரவுகள், தொழிற்சாலைகளில் சில மேற்பார்வையாளர்கள் அழகான பெண்களை அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லும் சம்பவங்கள், மனிதவளப் பிரிவு தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காத நிலை ஆகியவை பற்றி பேசத் தொடங்கினர்.

அப்போது ரஜினி, ‘‘எங்கள் நிறுவனத்தில் அப்படிச் செய்த ஒருவரை மூன்று மாதங்களுக்குள் வேலைநீக்கம் செய்தார்கள்” என்றார்.

எங்கள் குறைகளை வெளிப்படுத்த இது மட்டுமே எங்களுக்குள்ள மேடை. ஆனால் இங்கே பேசுவதால் நீதியோ தீர்வோ கிடைப்பதில்லை. எங்களை அமைதிப்படுத்தி, பாதுகாப்பின்றி விட்டுவிட்டு, எங்கள் உரிமைகளை பறித்துக் கொண்டு எந்தப் பொறுப்பும் ஏற்காத அதிகாரிகள் மீது நியாயமான கோபம் எங்களுக்கு உள்ளது.

நாம் எப்படித் தங்களுக்கான நீதியைப் பெறுவது? எங்கள் எதிர்காலத்தை எப்படிப் பாதுகாப்பது? தொழில்துறையை எப்படிக் காப்பது?

நானும் மே தினத்தில் சேகரிக்கப்பட்ட கோரிக்கைகளை வைத்து ஒரு தொழிற்சங்கத் தலைவி போல உரையாற்றினேன். எல்லோரும் கைதட்டி பாராட்டினர்.

நெலும், ‘‘நீங்கள் எங்கள் தொழிற்சாலைக்கு வந்திருந்தால் நாமும் ஒரு தொழிற்சங்கம் தொடங்கியிருப்போம்” என்றார்.

அதற்கிடையில் மருத்துவமனையில் இருக்கும் மாலனியைப் பார்க்க நீர்கொழும்பு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது. அனைவரிடமும் விடைபெற்று அறைக்குச் சென்றேன்.

யசாரா விதுமிணி



# கைக்குட்டையில் மறைந்த கண்ணீர் (கவிதை)

நாளைய உலகை மலரச் செய்யும் மனங்களிலிருந்து எழுந்தவள்...
வாழ்க்கையை ஒளிரச் செய்யும் சிரிப்பு மலர்களாய் மலர்ந்தவள்...
தாயாகவும் மகளாகவும் உயர்ந்தவள்...
துணிச்சலான பெண்ணின் உள்ளம் எரியும் நெருப்பாய் எழுந்தது...
கொடூர மிருகங்கள் அவளை எரிப்பது போல்...
அவள் காணும் இனிய கனவுகளை நசுக்குகின்றன...
பணத்துக்காக தன் கனவுகளை இரண்டாம் இடத்தில் வைத்து உழைக்கிறாள்...
இந்த நாட்டின் மகளிரை என்றென்றும் பாதுகாப்போம்...
முடிவில்லா வேலைப்பளுவை புன்னகையால் மறைத்துக்கொண்டு...
கோடிக்கணக்கான குடும்பங்களின் பாரத்தைத் தாங்கிக்கொண்டு...
ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் தாயாய் வாழ்ந்து...
உலகைத் தாங்கும் வலிமையான கைகளின் சொந்தக்காரி...
வாழ்க்கை மலரட்டும் என்று பாடுபடுகிறாள்...
உலகையே தன் கையில் தாங்கி அமைதியாக மலர்கிறாள்...
அதிகாரமும் ஒளிவுமாக வளர்ந்தாலும்...
வேலை முடிந்து மீண்டும் வேலைக்கே செல்கிறாள் இன்றும் நாளையும் அந்தப் பெண்...

**ஏ. சாந்தனி** பியகம சுதந்திர வர்த்தக வலயம்

# பங்களாதேஷ் ஆடைத் தொழிலாளர்கள் காலத்திற்கு ஏற்ற ஈத் கொடுப்பனவை கோருகின்றனர்

2026 மார்ச் மாதத்தில் ஈத்-உல்-பித்ர் பண்டிகைக்கு முன்னர், பங்களாதேஷின் ஆடைத் தொழிற்துறையில் பல தொழிற்சாலைகளில் சம்பளத் தாமதம் மற்றும் பண்டிகை போனஸ் வழங்கப்படாததால் தொழிலாளர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டனர்.

டாக்காவில் நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் அரி.ஃ.புல் ஹக் சௌதுரி, ஏழு வேலை நாட்களுக்குள் நிலுவை சம்பளங்களையும் ஈத் போனஸையும் வழங்குமாறு தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

தாமதமான சம்பளங்கள் தொழிலாளர்களுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்துவதோடு தொழிலாளர் அமைதியின்மையையும் அதிகரிக்கும் என்று அரசு எச்சரித்தது.

குறிப்பாக பெண் ஆடைத் தொழிலாளர்கள் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவுகள் மற்றும் பொருளாதார அசாதாரண நிலைமைகளால் இன்னும் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக தொழிலாளர் பிரதிநிதிகள் தெரிவித்தனர். தயாரிப்புத் துணிநூல் (RMG) துறையில் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் உரிமைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

ஈத் காலத்தில் தொழில்துறை அமைதியை நிலைநிறுத்த தொழிலாளர்களும் முதலாளிகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்தியது.

**https://tds-images.thedailystar.net/business/news/factory-owners-urged-clear-arrears-week-4119761?utm_**

# 2026 சர்வதேச தொழிலாளர் தினம் - கட்டுநாயக்க




இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஜ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.